Volume No: 1 Issue 1 September 2016

International Multidisciplinary Innovative Research Journal
-An International refereed e-journal of literary Explorations
ISSN: 2456 - 4613
IMIRJ, 1(1), 2016 [1-6]

# கம்பராமாயணம் - இராவண காவியம் - தலைவன், எதிர்நிலைத்தலைவன் அறிமுகக் காட்சி ஒப்பீடு



**செல்வி.பா.பத்ரகாளி**
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
வே.வ.வன்னியப்பெருமாள் பெண்கள் கல்லூரி (தன்னாட்சி)
விருதுநகர்.
E-mail ID: pathra.raj@gmail.com

## ஆய்வுச் சுருக்கம்

கம்பன் எழுதிய ராமாயணத்தின் தலைவன் இராமன். எதிர்நிலைத்தலைவன் இராவணன். புலவர் குழந்தையால் இயற்றப்பட்ட இராவண காவியத்தின் தலைவன் இராவணன். எதிர்நிலைத்தலைவன் இராமன். இவ்விரு காப்பியங்களின் வழி தலைவன், எதிர்நிலைத்தலைவன் புலவர்களால் அறிமுகப்படுத்தப்படும் காட்சியினை ஒப்பிடுவதாக இவ்வாய்வு அமைகின்றது.

**குறிப்புச் சொற்கள்:** அஞ்சனம் - கண் மை, கரா – முதலை, உதரம் - வயிறு.

## இராமன் பிறப்பு

தசரதன் பல ஆண்டுகள் மகப்பேறு இல்லாமல் வருந்துவதாகவும், மகப்பேறு கிடைக்கக் கலைக்கோட்டு முனிவனை அழைத்து யாகம் செய்ததாகவும், அவ்யாக வேள்வித் தீயிலிருந்து தீ எரிவது போன்ற தலைமுடியும் சிவந்த கண்ணும் உடைய பூதம் ஒன்று அழகிய ஒரு பொன் தட்டின் மேலே தூய்மையான அமுதத்தை ஒத்த ஒரு பிண்டத்தைத் தாங்கிக் கொண்டு விரைந்து எழுந்தது.

**“ஆயிடை, கனலின்நின்று, அம்பொன் தட்டம் மீத்**
**தூய நல் சுதை நிகர் பிண்டம் ஒன்று, - சூழ்**
**தீ எரிப் பங்கியும், சிவந்த கண்ணும் ஆய்,**
**ஏயென பூதம் ஒன்று எழுந்தது - ஏந்தியே”**

**(பா.கா. திருஅவதாரப்படலம், பா.265)**

*IMIRJ, 1(1) ISSN:* 2456 - 4613

என்று கம்பர் சுட்டியுள்ளார். வேள்வித்தீயில் இருந்து தோன்றிய அவ்வமுதத்தைக் கலைக்கோட்டு முனிவன் தசரதனிடம், 'உனக்குரிய பட்டத்து அரசியர்களுக்கு மூத்தவள், இளையவள் என்ற முறைப்படியே கொடுப்பாயாக' என்று கூறத் தசரதன் அமுதத்தின் ஒரு பகுதியைக் கோசலைக்குக் கொடுத்தான். அடுத்து கேகயன் மகளான கைகேயிக்கு ஒரு பகுதியையும், சுமித்திரைக்கு ஒரு பகுதியையும் கொடுத்தான். மறுபடியும் மிஞ்சிய அமுதப் பகுதியினைச் சுமித்திரைக்கே கொடுத்தான். ஆகையால் மூவரும் கருவுற்றனர். கோசலை புனர் பூசம் என்னும் விண்மீனும், கடகராசியும் துள்ளி ஆடவும், சித்தர்களும் இயக்கர்களும் அவர்களின் தேவியர்களும் முனிவர்களும் விண்ணுலகில் உள்ளவர்களும் நித்திய சூரிகளும் ஆரவாரம் செய்யவும், தரும தேவதை இடையீடின்றிப் பெருகி வளரவும், பிரளயத்தின் போது எல்லா உலகங்களையும் தனது வயிற்றிலே அடக்கி, அரிய மறைகளாலும் அறிய இயலாத பரம்பொருளை, அஞ்சனம் போன்ற கரிய நிறத்தவனை ஈந்தாள் என்று இராமனின் பிறப்பினைக் கம்பர் எடுத்தியம்புகின்றார். கம்பன் திருமாலான பரம்பொருளே அவதாரம் எடுத்து இராமனாகத் தோன்றியுள்ளதனை,

**“ஒரு பகல் உலகு எலாம்**
**உதரத்துள் பொதிந்து,**
**அரு மறைக்கு உணர்வு அரும்**
**அவனை, அஞ்சனக்**
**கரு முகிற் கொழுந்து எழில்**
**காட்டும் சோதியை,**
**திரு உறப் பயந்தனள் - திறம்**
**கொள் கோசலை.” (பா.கா. திருஅவதாரப் படலம், பா.282)**

என்று சுட்டுகின்றார்.

**இராவணன் பிறப்பு**

இராவண காவியத்தில் இராமன் எதிர்நிலைத்தலைவனாக சித்திரிக்கப்படுகின்றான். கம்பன் சுட்டியதைப் போன்றே புலவர் குழந்தையும் இராவண காவியத்தில் தசரதன் குழந்தைப் பேறில்லாமல் வருந்துவதாகவும், கலைக்கோட்டு முனிவனை அழைத்து யாகம் செய்வதாகவும் கூறுகின்றார். அதுமட்டுமல்லாது அசுவமேத யாக ஆண்குதிரையைக் கூரிய வாள் கொண்டு கோசலை வெட்டி வீழ்த்துவதாகவும், வீழ்த்தப்பட்ட குதிரையை இரவு முழுவதும் தன் கணவனோடு தழுவி இருப்பது போல கட்டித் தழுவிக் கழித்ததாகக் கூறுகின்றார். மேலும் யாக நூல் நெறிப்படி தசரதன் தன் மனைவியர் மூவரையும் யாகம் செய்வித்த புரோகிதர்களான ரித்விக்குகள் மூவருக்கும் யாக தட்சணையாக அளித்ததாகவும் கலைக்கோட்டு முனிவரோடு மற்ற

யாகப் புரோகிதர்கள் மூவரும் சேர்ந்து பட்டத்தரசிகளுடன் கூடியதாகவும் அதன் விளைவாக மூவரும் கருவுற்றதாகவும் சுட்டுகின்றார்.

**“முனிகலைக் கோட னோடு மூவரும் மூவ ரோடு**
**கனிமொழி பேசிக் கூடிக் கலந்தனர் கருப்பங் கொள்ள**
**அனையவர்க் கீடாப் பொன்கொண் டரசன்பால் விடுத்துச் சென்றார்**
**மனைவியர் பெறுநா ளாக மக்களைப் பெற்றா ரம்மா”**

(இராவண காவியம், விந்தக் காண்டம், மகப்பெறு படலம், பா.25)

பட்டத்தரசிகள் மூவரும் மக்களை ஈன்றெடுத்தனர். கோசலை என்னும் நங்கையாகிய மான் இராமன் என்பவனை மகனாகப் பெற்றாள் என்பதன் வழி இராமனின் பிறப்பு குறித்து இராவண காவியத்தில் புலவர் குழந்தை சுட்டியுள்ளார்.

## இராமனின் வளர்ச்சி

குழந்தை பிறந்த 14 நாட்களுக்குப் பிறகு தசரதனின் குலகுருவான வசிட்டன், ஒரு முதலையானது கஜேந்திரனது காலைக் கவ்விக் கொண்டு வருத்த, கஜேந்திரன், ‘பாம்பணையில் துயில்பவனே’ என அழைக்க, முதலையை அழித்து யானையைக் காத்த பரமனுக்கு ‘இராமன்’ என்னும் பெயரைச் சூட்டியதாகக் கம்பர் சுட்டியுள்ளார்.

**“கரா மலைய, தளர் கைக் கரி எய்த்தே,**
**‘அரா-அணையில் துயில்வோய்!’ என, அந் நாள்,**
**விராவி, அளித்தருள் மெய்ப்பொருளுக்கே,**
**‘இராமன்’ எனப் பெயர் ஈந்தனன் அன்றே”**

(பா.கா. திருஅவதாரப் படலம், பா.296)

என்கிறார். ஆனால் புலவர் குழந்தை பிறப்பைக் கூறும் பொழுதே,

“நங்கைகோ சலையா மானும் ராமனென் பானைப் பெற்றாள்”

(இராவண காவியம், விந்தக் காண்டம், மகப்பெறு படலம், பா.26)

என்று சுட்டியுள்ளார்.

இராமன் தன் தம்பியர் மூவருடனும் சேர்ந்து குலகுருவான வசிட்டரிடம் வேதங்கள், கலைகளைக் கற்றான். யானை, தேர், குதிரைகளைச் செலுத்துதல் முதலான வாகனப் பயிற்சிகளையும் கற்று, படைக்கலங்களையும் வில்வித்தையோடு பயின்று இராமன் வளர்ந்து வந்தான். இராமனும், இலக்குவனும் ஆறு, சோலை, பொய்கைகள் என்று அலைந்து திரிந்தனர். அவர்கள் திரும்பி வரும் பொழுது தம்மை எதிர்ப்படும் மக்களைப் பார்த்து இராமன், ‘எம்மால் உங்களுக்கு ஆக வேண்டியது உளதோ? துன்பம் ஏதும் இல்லையே? மனைவி நலமா? பிள்ளைகள் நலமா? என

*IMIRJ, 1(1) ISSN:* 2456 - 4613

மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு விசாரிப்பவனாக, நற்பண்புகள் கொண்டவனாக, அரி, அயன், அரன் எனும் முக்கடவுளர்க்கும் முதல்வனாக வாழ்ந்து வந்தான் என்று கம்பன் இராமனைப் பரம்பொருளுக்கும் மேலானவனாக அறிமுகப்படுத்துகின்றார்.

புலவர் குழந்தை, இராவண காவியத்தில் இராமன் தக்க கலைகள் பயின்று, அரச வித்தைகள் கற்று, வீரம் பெற்றுக் காளைப் பருவம் அடைந்து வாழ்ந்து வந்ததாக அறிமுகப்படுத்துகின்றார்.

## இராவணன் பிறப்பு, வளர்ச்சி

கம்பராமாயணத்தில் இராவணன் எதிர்நிலைத்தலைவன். கம்பன் தனது நூலில் இராவணனின் பிறப்பு, வளர்ச்சி குறித்து எச்செய்தியினையும் சுட்டவில்லை. இராவண காவியத்தில் இராவணன் தலைவன். ஆகையால், புலவர் குழந்தை இராவணனை விச்சிரவாவுவின் தேவியான கேகசி என்னும் அன்னை, 'முன்னோர்களின் புகழை எல்லாம் அரும்பு, மலர், போது என மணம் பரப்பச் செய்து தன்னுடைய அரும் புகழை எல்லாம் தமிழர்களின் மான, வீர வாழ்வினுக்கு அளித்த எம் அரிய தலைவனான இராவணனை இனிதாக ஈன்றெடுத்தாள்' என்று அறிமுகப்படுத்துகின்றார்.

**"அன்னவன் தேவி யான அணங்குகே கசியெம் மன்னை**
**முன்னவர் புகழை யெல்லாம் முனையலர் படப்போ தாக்கித்**
**தன்னரும் புகழை யின்பத் தமிழர்வாழ் வதனுக் கீந்த**
**என்னருந் தலைவன் தன்னை ஈன்றனள் இனிதின் மாதோ"**
**(இராவண காவியம், இலங்கைக் காண்டம், இராவணப் படலம், பா.3)**

என்கிறார். இராவணனை வளரும் போதே தமிழ் மொழி மீது அதிகப் பற்று கொண்டவனாக, இயல், இசை, நாடகம் என்ற முத்தமிழிலும் தேர்ச்சி பெற்றவனாக அறிமுகப்படுத்துகின்றார். அகம், புறம் கற்ற ஒப்பற்ற தலைவனாகக் காட்டியுள்ளார். அறிவுக் கல்வி, போர்க்கல்வி நிரம்பியவனாகவும் சுட்டியுள்ளார்.

கம்பன் இராவணனை ஆரணிய காண்டம் சூர்ப்பனகை சூழ்ச்சி படலத்தில் தான் முதன் முதலில் அறிமுகப்படுத்துகிறார். அதற்கு முன்பு பாலகாண்டத்தில் திருஅவதாரப் படலத்தில் அரக்கர்களின் கொடுமை தாளாது தேவர்கள் சிவபெருமானிடம் முறையிட, சிவபெருமான், 'இனி, யான் அரக்கர்களுடன் போர் புரிய மாட்டேன்' என்று மறுத்துரைத்து, தேவர்களுடன் பிரம்மனது இருப்பிடம் நோக்கிச் சென்றனர். அப்பொழுது தேவர்கள் வாயிலாக,

**"இருபது கரம், தலை ஈர்-ஐந்து, என்னும் அத்**
**திருஇலி வலிக்கு, ஒரு செயல் இன்று, எங்களால்,**

கரு முகில் என வளர் கருணைஅம் கடல்
பொருது, இடர் தணிக்கின் உண்டு' எனும் புணர்ப்பினால்"

(பா.கா. திருஅவதாரப் படலம், பா. 189)

என்று இராவணனைப் பற்றிச் சுட்டியுள்ளார். ஆனால் முறையாகச் சூர்ப்பனகை சூழ்ச்சிப் படலத்தில் தான் கம்பன் இராவணனை அறிமுகப்படுத்துகின்றார்.

தெய்வத் தச்சனாகிய விச்வகர்மாவினால் படைக்கப்பட்ட ஒப்பற்ற மணிகளால் செய்யப் பெற்ற சபை மண்டபத்திலே அம்மண்டபம் அழகு பெறுமாறு இராவணன் வீற்றிருந்தான். சிவனும் திருமாலும் பிரமனும் கூட இராவணனை வருத்தும் வலிமை உடையவர்கள் ஆகமாட்டார்கள் என்றால் வேறு எவர் இராவணனை வெல்லும் ஆற்றல் உடையவர் ஆவார்? எவரும் இல்லை என்று சுட்டுகின்றார்.

மேலும், எட்டுத்திக்கு யானைகளின் கொம்புகளும் முறியும்படியான வலிமை உடையவன்; தோள்கள் உதயபருவதம் போலவும் பன்னிரு சூரியர்கள் இராவணன் காதில் இருபது குண்டலங்களாய் விளங்கும் தோற்றமுடையவன்; அசுரர்கள், தேவர்கள் முதலானோர்கள் நாள்தோறும் வந்து வணங்கும் சிறப்புடையவன்; சித்தர், கின்னரர், நாகர்கள் முதலானோர் அஞ்சி நடுங்கி ஏவல் செய்யும்படியான வீரம் உடையவன்; திசையானைகளின் வலிமையடக்கி, சிவபெருமான் வீற்றிருந்த கையிலை மலையை பெயர்த்தெடுத்த தோள் வலிமை உடையவன்; அரசவை மண்டபத்தில் தேவகுருவான பிருகஸ்பதி, சுக்கிரன், இந்திரன் முதலான தேவர்களும் வீற்றிருக்கக் கூடிய சிறப்புடையவன் என்றெல்லாம் கம்பர் இராவணனின் பெருமைகளை, ஆற்றல்களை எடுத்துரைத்துள்ளார். மேலும் நாழிகை முரசம் அறைய வேண்டிய சமயங்களிலெல்லாம் தவறாமல் யமன் அச்சத்தால் தன் ஆடையால் வாய் புதைத்துக் கொண்டு வெகுமரியாதையோடு வந்து காலத்தைச் சரியாகக் கணக்கிட்டுச் சொல்லும் குற்றேவல் தொழிலைச் சரியாக நடத்துவதாகவும், அக்கினிதேவன் இராவணனுக்கு விளக்கு ஏற்றும் பணியைச் செய்பவனாகவும் சுட்டியுள்ளார். தேவ மகளிரான ஊர்வசி நடனமாட இராவணன் அந்நடனத்தைப் பார்த்துக் கொண்டு இருப்பதாகவும் கம்பர் அறிமுகப்படுத்துகின்றார்.

## முடிவுரை

- ❖ கம்பராமாயணத்தில் இராமன் தலைவன் என்பதால் கம்பன் இராமனைப் பரம்பொருள் அவதாரமாக, ஆண், பெண் உறவு அற்று, யாகத்தில் தோன்றும் ஒரு அமுதப்பிண்டத்தின் வழி பிறப்பவனாகச் சுட்டியுள்ளார்.

- ❖ இராவண காவியத்தில் இராமன் எதிர்நிலைத் தலைவன் என்பதால் புலவர் குழந்தை அவதாரமாகச் சுட்டாமல் மனித உறவின் வழி பிறக்கும் ஒரு சாதாரண மானுடனாகச் சித்திரித்துள்ளார்.

❖ இராமாயணத்தில் இராவணன் எதிர்நிலைத் தலைவன். கம்பன் இராவணனுடைய பிறப்பு, வளர்ச்சி நிலைகள் எதனையும் சுட்டாது, அறிமுகப்படுத்தும் போதே அசுரர்கள், தேவர்கள் யாவரும் அஞ்சி அவனுக்குக் குற்றேவல் செய்யும் வலிமையுடைய எதிர்நிலைத் தலைவனாகவே அறிமுகப்படுத்துகின்றார்.

❖ இராவண காவியத்தில் இராவணன் தலைவன். ஆகையால் புலவர் குழந்தை இராவணனுடைய பிறப்பு, அவன் கற்ற கல்வி, தமிழின் மீது, தமிழ் மக்கள் மீது அளவற்ற பற்றுக் கொண்டவனாக அறிமுகப்படுத்துகின்றார்.

❖ கம்பர், புலவர் குழந்தை இருவருமே தத்தம் காவியத்தின் தலைவர்களை மிக உயர்த்தியும், எதிர்நிலைத் தலைவர்களை மாறுபட்ட நோக்கிலும் படைத்துக் காட்டியுள்ளதை இவ்வாய்வின் வழி உணர முடிகின்றது.

**சான்றாதார நூல்கள்**

1. கம்பராமாயணம் - அ.ச.ஞானசம்பந்தன் (ப.ஆ.)

நியூசெஞ்சுரி புக் ஹவுஸ்(பி) லிமிடெட், சென்னை.

2. இராவண காவியம் - புலவர் குழந்தை, ந.வெற்றியழகன் (உ.ஆ.), சாரதா பதிப்பகம், சென்னை.